செய்தி வெளியீடு எண் : 43 நாள் :24.04.2018

***தேனி மாவட்டம்***
***கிராம சுயாட்சி பிரச்சாரம் (Gram Swaraj Abiyan) திட்டத்தின் கீழ்***
***நடைபெற்ற சிறப்பு கிராம சபைக்கூட்டத்தில்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்றார்:-***

*****

தேனி மாவட்டம், கோட்டூர் கிராமத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் சார்பில் கிராம சுயாட்சி பிரச்சாரம் (Gram Swaraj Abiyan) திட்டத்தின் கீழ் கிராம ஊராட்சி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு கிராம சபைக்கூட்டத்தில் இன்று (24.04.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்றார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவிக்கையில், மத்திய, மாநில அரசுகளால் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்காகவும், முன்னேற்றத்திற்காகவும், செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் ஆகியவற்றை கிராமங்களில் வசிக்கின்ற பொதுமக்களும் நன்கு தெரிந்திடும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக உயர்த்திடும் வகையில் கிராம சுயாட்சி பிரச்சாரம் (Gram Swaraj Abiyan) திட்டத்தின் கீழ் 14.04.2018 முதல் 05.05.2018 வரையிலான நாட்களில் நடத்திட உத்தரவிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, தேனி மாவட்டத்தில் உள்ள 6 கிராமங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்று (24.04.2018) சிறப்பு கிராம சபைக்கூட்டம் நடத்தப்படுகிறது. கிராம சபைக்கூட்டம் நடத்தப்படுவதன் முக்கிய நோக்கம் கிராமத்திற்கு என்ன தேவை என்பதனையும், கிராம வளர்ச்சிக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அரசின் திட்டப்பணிகள் குறித்து பொதுமக்களின் வாயிலாக, கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், தெருவிளக்கு, கழிப்பிட வசதி, போக்குவரத்து வசதி, கழிவு நீர் வாய்க்கால் வசதி போன்ற பல்வேறு வசதிகளை கேட்டறிந்து அதனை நிறைவேற்றுவதே ஆகும்.

கிராமப்புற மக்கள் வெளிப்புறங்களில் மலம் கழிப்பதை அறவே தவிர்த்திட வேண்டும். சுகாதாரமான தமிழகத்தினை உருவாக்கிட வேண்டும் என்பதற்காக தமிழக அரசு ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் ஒரு கிராமத்திற்கு தேவையான தனிநபர் கழிப்பிட வசதி, பொது ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் தங்களின் குடியிருப்புகளில் கழிப்பறைக்கு தேவையான இட வசதி இருந்தால் தனிநபர் கழிப்பறை உருவாக்கிட ரூ.12,000/- அரசு மானியம் வழங்கி வருகிறது. பொதுமக்கள் திறந்த வெளிகளில் மலம் கழிப்பதினை தவிர்த்து, இத்திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை பள்ளிகளில் சேர்த்து கல்வி கற்க செய்திட வேண்டும். இதன்மூலம் அவர்கள் வாழ்வில் ஏதேனும் வேலைவாய்ப்பினை பெற்று அவர்களின் எதிர்காலம் சிறக்க வழிவகை ஏற்படும். தாய்மார்கள் தங்களது குழந்தைகளுக்கு வயதிற்கேற்ப தடுப்பூசியினை அரசு நிர்ணயத்துள்ள காலஅட்டவணைப்படி போட்டு, குழந்தைகளை ஆரோக்கியமானவர்களாக உருவாக்கிட வேண்டும். அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை கொண்டு வாழ்வில் வளம் பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி பா.திலகவதி அவர்கள், மகளிர் திட்ட அலுவலர் திரு.கல்யாண சுந்தரம் அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி கிருஷ்ணவேனி அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரகுபதி அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், தேனி வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கோவிந்தராஜ் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**